**ஜூலை – 16**

# TNPSC துளிகள்

- இமாச்சல பிரதேசத்தின் லாஹுல் மற்றும் ஸ்பிதி மாவட்டத்தில் உள்ள கீலாங்கில், இந்தியாவின் முதலாவது அதி-உயர மருத்துவ மற்றும் பொது சுகாதார ஆராய்ச்சி மையத்தை இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை (ICMR) அமைக்கிறது.
- திண்டுக்கல் ஐ. லியோனிக்குப் பதிலாக, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவராக லயோலா மணியை மூன்று ஆண்டு காலத்திற்கு தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.
- மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்துவிசை வளாகத்தில் (IPRC), வரவிருக்கும் LVM3-M7 (ஏவு வாகனம் Mark-3 திட்டம்-7) திட்டத்திற்கான உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட CE20 மீக்குளிர் நிலையிலான இயந்திரத்தின் விமான ஏற்புக்கான நேரடிச் செயல் முறைச் சோதனையை இஸ்ரோ வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
  - CE20 என்பது இந்தியாவின் மிகக் கனமான செயல்பாட்டு ஏவு வாகனமான LVM3-இன் மேல் நிலைக்கு ஆற்றலளிக்கும் ஒரு உள்நாட்டு அதிக உந்துவிசை கொண்ட மீக்குளிர் நிலையிலான ஏவுகல இயந்திரமாகும்.
- 2026 ஆம் ஆண்டு ஜூலை 11 அன்று வியட்நாமின் பூ குவாக் (Phu Quoc) பகுதியில் உள்ள மே ரட் ங்கோய் தீவு அருகே அதிவேகப் படகு கவிழ்ந்த விபத்தில் குறைந்தது 15 இந்திய சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர்.
- குஜராத்தின் அகமதாபாத் நகரில் உள்ள பாதஜ் பகுதியில் 2026 ஆம் ஆண்டு ஜூலை 12 அன்று ஒரே மணி நேரத்தில் 3.61 லட்சம் மரக்கன்றுகளை நட்டு கின்னஸ் உலக சாதனை படைக்கப் பட்டுள்ளது.
- ONGC நிறுவனம் 2026 ஆம் ஆண்டு ஜூலையில் லடாக்கின் புகா பள்ளத்தாக்கில் தனது இரண்டாவது புவி வெப்பக் கிணற்றை தோண்டும் பணியை நிறைவு செய்துள்ளது.
- அஜர்பைஜானின் பாகுவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான சிறந்த எக்மாண்ட் வழக்கு விருதில் (BECA) இந்தியாவின் நிதி உளவுப் பிரிவு-இந்தியா (FIU-IND) இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது.
  - ஒரு பெரிய அளவிலான சைபர் மோசடி மற்றும் பணமோசடி வலையமைப்பைக் கண்டறிந்த FIU-IND-இன் விசாரணையைப் பாராட்டி இந்த விருது வழங்கப் பட்டு உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பசு வதை தடை மீது உச்ச நீதிமன்றம்

- தமிழ்நாட்டில் பசு மற்றும் கன்றுக்குட்டிகளை வதைப்பதற்கு முழுமையான தடை விதிக்க உத்தரவிட்ட சென்னை உயர் நீதிமன்றத்தின் (HC) உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் (SC) இடைக்காலத் தடை விதித்துள்ளது.
- சென்னை உயர் நீதிமன்றமானது 2026 ஆம் ஆண்டு மே 27 அன்று மாநிலம் தழுவிய தடையை விதித்திருந்தது ஆனால் தமிழ்நாடு அரசு இந்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.
- 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு விலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி, வேலை செய்வதற்கும் இனப்பெருக்கத்திற்கும் தகுதியற்றவை என சான்றளிக்கப்பட்ட 10 வயதிற்கு மேற்பட்ட பசுக்களை வதைக்க அனுமதியுள்ளது என்று மாநில அரசு

வாதிட்டது.

- உயர் நீதிமன்றத்தின் உத்தரவில் முதன்நோக்கிலேயே திருத்தம் தேவைப்படுவதாகக் குறிப்பிட்ட உச்ச நீதிமன்றம், இந்த முழுமையான தடைக்கு இடைக்காலத் தடை விதித்தது.
- அத்தோடு, தற்போதைய சட்டங்கள் உரிமம் பெற்ற இறைச்சிக் கூடங்களில் வதை செய்வதை முறைப்படுத்துகின்றனவே தவிர, முழுமையான தடையை விதிக்க வில்லை என்றும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.




# தேசியச் செய்திகள்

## சென்ட்ரல் விஸ்டா புதிய அறிவிப்பு





- புது தில்லியில் உள்ள சென்ட்ரல் விஸ்டா பகுதியானது 2026 ஆம் ஆண்டு ஜூலை 12 முதல் 'கர்தவ்யா பவன் வளாகம்' அல்லது 'கர்தவ்யா பவன் பகுதி' என்று அழைக்கப் படுகிறது.
- இந்த மறுபெயரிடப்பட்ட பகுதியில் அரசு அலுவலகக் கட்டடங்கள், கர்தவ்யா மார்க் மற்றும் சென்ட்ரல் விஸ்டா மறுமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் பிற கட்டுமானங்கள் அடங்கும்.

- சென்ட்ரல் விஸ்டா என்பது புது தில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் இல்லம் (Rashtrapati Bhavan) மற்றும் இந்தியா கேட் ஆகியவற்றிற்கு இடையே அமைந்துள்ள இந்தியாவின் மத்திய நிர்வாக மண்டலமாகும்.
- இத்திட்டத்தின் கீழ் மூன்று கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, 'கர்தவ்யா பவன்கள்' என்று பெயரிடப்பட்டுள்ளதுடன் இதில் முதலாவது கட்டடம் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் திறக்கப்பட்டது.
- முன்னதாக, 2022 ஆம் ஆண்டில் ராஜ்பாத் 'கர்தவ்யா பாத்' என்றும், 2025 ஆம் ஆண்டில் புதிய பிரதமரின் அலுவலக (PMO) வளாகம் 'சேவா தீர்த்' என்றும் மறுபெயரிடப் பட்டன.

## கிராமோதயம் திட்டம்

- நபார்டு (NABARD - தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி) தனது 45-வது ஸ்தாபன தினமான 2026 ஆம் ஆண்டு ஜூலை 13 அன்று கிராமப்புற தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக 'கிராமோதயம்' திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- கிராமோதயம் என்பது இந்தியா முழுவதும் சுமார் 4,000 கிராமப்புற தொழில்முனைவோரை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு மூன்றாண்டு சோதனைத் திட்டமாகும்.
- இந்தத் திட்டம் 'டிஜிட்டல்-முதன்மை' (digital-first) கலப்பு மாதிரியைப் பின்பற்றுகிறது மற்றும் கிராமப்புற இளைஞர்கள் நிலையான தொழில்களைத் தொடங்க ஆதரவு அளிக்கும்.
- இது மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் கீழ் உள்ள நபார்டு (NABARD) மற்றும் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (NSDC) கூட்டு முயற்சியாகும்.
- இத்திட்டம் திறன் பயிற்சி, தொழில்முனைவோர் மேம்பாடு, வழிகாட்டுதல், ஆலோசனை மற்றும் நிறுவனத்தை அமைப்பதற்கான ஆதரவை வழங்குகிறது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பசுமைக் குளிரூட்டி தொழில்நுட்பம் - CSIR-IICT

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபை – இந்திய வேதியியல் தொழில்நுட்ப நிறுவனம் (CSIR-IICT) இணைந்து, அடுத்த தலைமுறை பசுமைக் குளிரூட்டியான ஹைட்ரோபுளூரோஒலிஃபின்களை (HFOs) தயாரிப்பதற்கான இந்தியாவின் முதலாவது உள்நாட்டு செயல்முறை தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.

- குளிரூட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் வாகனக் குளிரூட்டும் அமைப்புகளில் பயன்படுத்தப்படும் ஹைட்ரோபுளூரோகார்பன்களுக்கு (HFCs) மாற்றாக ஹைட்ரோ புளூரோ ஒலிஃபின்கள் (HFOs) வடிவமைக்கப்பட்டுள்ளன.
- இத்தொழில்நுட்பம் பூஜ்ஜிய ஓசோன் சிதைவுத் திறன் (ODP), குறைந்த புவி வெப்ப மயமாதல் திறன் (GWP) மற்றும் மிகக் குறுகிய வளிமண்டல ஆயுட்காலம் கொண்ட HFO-1234yf ஐ உற்பத்தி செய்கிறது.
- இந்த உள்நாட்டு செயல்முறை தொழில்துறையினருக்கு தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்ய தயாராக உள்ளது, இது இறக்குமதி செய்யப்படும் குளிரூட்டி தொழில் நுட்பத்தின் மீதான சார்பைக் குறைக்கும்.
- கிகாலி திருத்தத்தின் கீழ், இந்தியா 2032 முதல் 2047 ஆம் ஆண்டு வரையிலான நான்கு கட்டங்களில் ஹைட்ரோபுளூரோகார்பன்களின் (HFCs) பயன்பாட்டைப் படிப்படியாகக் குறைக்கும்.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### காண்டாமிருகங்கள் கணக்கெடுப்பு 2026




- 2026 ஆம் ஆண்டு ஜூன் 25 முதல் 27 வரை நடத்தப்பட்ட நான்காவது காண்டாமிருகங்கள் கணக்கெடுப்பின்படி, உத்தரப் பிரதேசத்தின் துத்வா புலிகள் காப்பகத்தில் காண்டாமிருகங்களின் எண்ணிக்கை 53 ஆக உயர்ந்துள்ளது.
- இந்திய காண்டாமிருகம் (ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம்) IUCN (சர்வதேச இயற்கை

பாதுகாப்பு சங்கம்) செந்நிறப் பட்டியலில் 'எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனம்' (Vulnerable) எனப் பட்டியலிடப்பட்டுள்ளது.

- துத்வாவில் காண்டாமிருகங்கள் மறுஅறிமுகத் திட்டம் 1984-85 ஆம் ஆண்டில் அசாம் மற்றும் நேபாளத்திலிருந்து கொண்டு வரப்பட்ட ஏழு காண்டாமிருகங்களுடன் தொடங்கப் பட்டது.
- 2026 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பு வனத்துறை அதிகாரிகள் மற்றும் உலக வனவிலங்கு நிதியம்-இந்தியா (WWF-India) ஊழியர்களைக் கொண்ட 20 குழுக்களால் நடத்தப் பட்டது.
- துத்வா புலிகள் காப்பகம் காண்டாமிருகங்களை இனப்பெருக்கம், பாதுகாப்பு மற்றும் காடுகளில் விடுவிப்பதற்காக காண்டாமிருக மறுவாழ்வு மண்டலங்கள் (RR1 மற்றும் RR2) மூலம் நிர்வகிக்கிறது.

## இந்தியாவின் வன வளம்

### THE ECONOMIC VALUE OF INDIA'S FORESTS

Break-up of India's forest wealth by forest type

India's forests are worth **$2.5 TRILLION**

From tropical rainforests to alpine pastures, India's diverse forest ecosystems contribute immense economic, ecological and social value.



| TYPE OF FOREST | VALUE (USD) |
|---|---|
| **TROPICAL** | |
| Tropical Evergreen Forests | $277.6 billion |
| Tropical Semi-Evergreen Forests | $36.8 billion |
| Tropical Moist Deciduous Forests | $49.6 billion |
| Tropical Dry Deciduous Forests | $702.8 billion |
| Tropical Wet Evergreen Forests | $1.8 billion |
| Tropical Thorn Forests | $217.9 billion |
| Littoral and Swamp Forests | $12.6 billion |
| **SUB-TROPICAL** | |
| Subtropical Broadleaf Forests | $475.3 million |
| Subtropical Pine Forests | $102.5 billion |
| Subtropical Dry Evergreen Forests | $60.2 billion |
| **TEMPERATE** | |
| Montane Wet Temperate Forests | $60.6 billion |
| Himalayan Moist Temperate Forests | $102.5 billion |
| Tropical Montane Forests | $217.9 billion |
| Montane Subtropical Forests | $2.4 billion |
| Montane (Shola) Forests | $649 million |
| Alpine Forests and Pastures | $168.6 billion |
| Coniferous Forests | $7.8 million |

- 'என்விரான்மெண்டல் அண்ட் சஸ்டைனபிலிட்டி இண்டிகேட்டர்ஸ்' இதழில் வெளியான ஆய்வின்படி, இந்தியாவின் காடுகள் ஆண்டுக்கு சுமார் 2.5 டிரில்லியன் டாலர் மதிப்பு உள்ள சுற்றுச்சூழல் சேவைகளை வழங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்த ஆய்வு 45 மதிப்பீட்டு ஆய்வுகளை (2000-2024) பகுப்பாய்வு செய்து, ஒரு ஹெக்டேருக்கு ஆண்டுக்கு சராசரியாக $31,001 மதிப்புள்ளதாக மதிப்பிட்டுள்ளது.
- இந்தியாவின் சுமார் 8.27 லட்சம் சதுர கிமீ பரப்பளவுள்ள காடு மற்றும் மரங்களின் உறைவிடமானது கார்பன் சேமிப்பு, நீர் ஒழுங்குமுறை, வெள்ளக் கட்டுப்பாடு, மகரந்தச் சேர்க்கை மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு போன்ற சேவைகளை வழங்குகிறது.
- வெப்பமண்டல வறண்ட இலையுதிர் காடுகள் மிக உயர்ந்த ஒட்டுமொத்த மதிப்பை வழங்குகின்றன, அதே சமயம் வெப்பமண்டல முள் காடுகள் ஒரு ஹெக்டேருக்கான

அதிகபட்ச மதிப்பைத் தருகின்றன.

- சுற்றுச்சூழல்-பொருளாதாரக் கணக்கியல் அமைப்பு (SEEA) கட்டமைப்பின் மூலம் தேசியக் கணக்கியலில் காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பின் மதிப்பைச் சேர்க்க வேண்டியதன் அவசியத்தை இந்த ஆய்வு வலியுறுத்தியுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக மகத்தான முதலீட்டு அறிக்கை 2026

- உலக அறிவுசார் சொத்துரிமை நிறுவனம் (WIPO) மற்றும் லூயிஸ் வணிகப் பள்ளி ஆகியவை இணைந்து வெளியிட்ட உலக மகத்தான முதலீட்டு அறிக்கை 2026-ஆனது, உலகளாவியக் கண்டுபிடிப்பு மையமாக இந்தியாவின் வளர்ச்சியை எடுத்துரைத்து உள்ளது.
- உலகின் 15 பெரிய பொருளாதாரங்களில் மகத்தான முதலீட்டில் இந்தியா அதிவேக வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- மென்பொருள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D), அறிவுசார் சொத்துரிமை (IP), கண்டுபிடிப்பு மற்றும் நிறுவனத் திறன்கள் ஆகியவற்றின் உந்துதலால், 2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் மகத்தான முதலீடு 7.9% வளர்ச்சியடைந்து $78.2 பில்லியனை எட்டியுள்ளது.
- டிஜிட்டல் மாற்றம், புத்தொழில்கள் மற்றும் கண்டுபிடிப்புகளின் ஆதரவுடன் அறிவு சார்ந்த பொருளாதாரத்தை நோக்கி இந்தியா மாறுவதை இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.
- இது சீர்திருத்தங்கள், தொழில்நுட்பத் தத்தெடுப்பு மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றின் மூலம் இந்தியாவின் வலுவடைந்து வரும் கண்டுபிடிப்புச் சூழலமைப்பைப் பிரதிபலிக்கிறது.




## உலகளாவிய வாழ்விடக் குறியீடு 2026

- வாழும் சூழ்நிலை மற்றும் நகர்ப்புற மீள்திறனின் அடிப்படையில் நகரங்களைத் தரவரிசைப்படுத்தும் 'உலகளாவிய வாழ்விடக் குறியீடு 2026'-ஐ எகனாமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யூனிட் (EIU) வெளியிட்டுள்ளது.
- இக்குறியீடு நிலைத்தன்மை, சுகாதாரம், கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல், கல்வி

மற்றும் உள்கட்டமைப்பு ஆகிய ஐந்து பிரிவுகளின் கீழ் உலகளவில் 173 நகரங்களை மதிப்பீடு செய்துள்ளது.

- வெவ்வேறு நகரங்களில் வசிப்பவர்களைப் பாதிக்கும் வாழ்க்கைத் தரம் மற்றும் சவால்களை அளவிடுவதற்கான உலகளாவிய அளவுகோலை இந்த அறிக்கை வழங்குகிறது.
- 2026 ஆம் ஆண்டில், உலகளாவிய வாழ்விட நிலைத்தன்மை பரவலாக நிலையானதாக இருந்தது, ஆனால் புவிசார் அரசியல் மோதல்கள் மற்றும் சுகாதார மேம்பாடுகள் போன்ற காரணிகளால் பிராந்தியப் போக்குகள் மாறுபட்டு காணப்பட்டன.
- சுகாதார முதலீடுகள் அதிகரித்ததன் காரணமாக ஆசிய நகரங்கள் முன்னேற்றம் கண்டன, அதே சமயம் பிராந்திய உறுதியற்ற தன்மையால் சில மத்திய கிழக்கு நகரங்கள் சரிவைச் சந்தித்தன.





# மாநிலச் செய்திகள்

## கர்நாடகாவில் தோரியம் படிமங்கள் கண்டுபிடிப்பு


- கர்நாடகாவின் சாம்ராஜநகர் மாவட்டம் குண்டலுபேட்டை தாலுகாவில் தோரியம் உள்ள கனிமப் படிமங்களை இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (GSI) அடையாளம் கண்டுள்ளது.
- கூத்தனூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் 700 ஏக்கர் பரப்பளவில் இந்தப் படிமங்கள் வரைபடமாக்கப்பட்டுள்ளன.
- தோரியம் (Th) என்பது அணு எண் 90-ஐக் கொண்ட ஒரு கதிரியக்க உலோகமாகும். மேலும் இது அணு உலை எரிபொருள் பயன்பாட்டிற்காக யுரேனியம்-233 ஆக மாற்றப் படலாம்.
- இந்தப் படிமங்கள் முக்கியமாக மோனசைட்டுடன் தொடர்புடையவை ஆகும்.

மோனசைட் என்பது தோரியம் மற்றும் அரிய வகை தனிமங்களைக் கொண்ட ஒரு பாஸ்பேட் கனிமமாகும்.

❖ சுரங்கங்கள் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் GSI, இந்தியாவில் புவியியல் வரைபடமாக்கல் மற்றும் கனிம ஆய்வுகளை மேற்கொள்கிறது.




## ஜோத்புரி மோஜாரி – ராஜஸ்தான்




❖ ஜோத்பூரின் சற்றேறத்தாழ 200 ஆண்டுகள் பழமையான 'மோஜாரி' (Mojari) கைவினைப் பொருளுக்கு மத்திய அரசிடமிருந்து புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.

❖ ஜோத்புரி மோஜாரி என்பது ராஜஸ்தானின் ஜோத்பூரைச் சேர்ந்த பாரம்பரியமாக கையால் செய்யப்பட்ட பாதணிகளாகும் என்பதோடு இது முக்கியமாக ஜினாகர் சமூகத்தினரால் தயாரிக்கப்படுகிறது.


❖ ஒட்டகம், ஆடு, பசு மற்றும் எருமை ஆகியவற்றின் தோல்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் இந்தக் கைவினைப் பொருள் நெகிழ்வானதாகவும், நீடித்து உழைக்கக் கூடியதாகவும், ராஜஸ்தானின் பருவநிலைக்கு ஏற்றதாகவும் பெயர் பெற்றது.

- வரலாற்று ரீதியாக, ஜினாகர் சமூகத்தினர் படைகளுக்காக ஜீன் (சிறு சேணங்கள்) மற்றும் மயான் (தோலால் செய்யப்பட்ட வாள்/கத்தி உறைகள்) ஆகியவற்றைத் தயாரித்து வந்துள்ளனர்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தமிழ் எழுத்தாளர் பூமணி மறைவு

- சாகித்ய அகாதமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளரான பூமணி தனது 79வது வயதில் சென்னையில் காலமானார்.
- பூமணி (இயற்பெயர் மாணிக்கவாசகம்), தென் தமிழகத்தின் கரிசல் மண்ணைக் கொண்ட பகுதியில் வாழும் மக்களின் வாழ்வியலைத் தத்ரூபமாகச் சித்தரித்ததற்காக பெயர் பெற்றவர்.
- சிவகாசி (1899) மற்றும் கழுகுமலை (1895) வகுப்புவாதக் கலவரங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் எழுதிய 'அஞ்ஞாடி' நாவலுக்காக 2014 ஆம் ஆண்டில் சாகித்ய அகாதமி விருதினைப் பெற்றார்.
- வெக்கை, பிறகு, நைவேத்தியம், கொம்மை, வாய்க்கால், அஞ்ஞாடி ஆகியவை இவரது குறிப்பிடத்தக்க நாவல்கள் மற்றும் 'கிழிசல்' என்பது இவருடைய சிறுகதைத் தொகுப்பு ஆகும்.
- இவருடைய 'வெக்கை' நாவலை அடிப்படையாகக் கொண்டு தேசிய விருது பெற்ற தமிழ் திரைப்படமான 'அசுரன்' எடுக்கப்பட்டது என்ற நிலையில், இவர் தேசியத் திரைப்பட வளர்ச்சிக் கழகத்திற்காக (NFDC) 'கருவேலம்பூக்கள்' என்ற படத்தையும் இயக்கியுள்ளார்.




# விளையாட்டுச் செய்திகள்

## விம்பிள்டன் 2026 வெற்றியாளர்கள்

- நான்கு கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் 2026-இன்

வெற்றியாளர்கள் பல்வேறு பிரிவுகளில் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

❖ இத்தாலி சேர்ந்த ஜானிக் சின்னர் அலெக்சாண்டர் ஸ்வெரேவை (ஜெர்மனி) தோற்கடித்து ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றார். இது அவரின் இரண்டாவது தொடர்ச்சியான விம்பிள்டன் பட்டமாகும்.

❖ செக்கியாவைச் சேர்ந்த லிண்டா நோஸ்கோவா கரோலினா முசோவாவை (செக்கியா) தோற்கடித்து மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றதன் மூலம் தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றினார்.

❖ ஹாரி ஹெலியோவாரா (பின்லாந்து) மற்றும் ஹென்றி பேட்டன் (இங்கிலாந்து) ஜோடி ஆடவர் இரட்டையர் பட்டத்தை வென்றது.

❖ குவோ ஹன்யு (சீனா) மற்றும் கிறிஸ்டினா மிலேடனோவிச் (பிரான்ஸ்) ஜோடி மகளிர் இரட்டையர் பட்டத்தை வென்றது.

❖ மார்செலோ அரேவலோ (எல் சால்வடார்) மற்றும் ஜெலினா ஆஸ்டபென்கோ (லாட்வியா) ஜோடி கலப்பு இரட்டையர் பட்டத்தை வென்றது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★